இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 01-10-2025

# வதந்திகளில் வாழ முடியாது!

நடிகர் விஜய்யின் பொறுப்பற்ற தன்மை காரணமாக 41 உயிர்கள் பலியானது. அதனை மறைக்க பல்வேறு வதந்திகளை ஊடகங்களில் பரப்பி வருகிறார்கள். அதில் முக்கியமானது மின்சாரத்தை துண்டித்தார்கள் என்பது ஆகும்.

**“மின்சாரம் துண்டிக்கப்படவில்லை”** என்று மின் வாரிய தலைமைப் பொறியாளர் ராஜலட்சுமி சொல்லி இருக்கிறார். **“விஜய் பிரச்சாரத்தின் போது மின்சாரம் துண்டிக்கப்படவில்லை. விஜய் வருவதற்கு முன்பு டிரான்ஸ்பார்மரிலும், மரத்திலும் சிலர் ஏறியதால் மின்சாரத்தை துண்டித்து, காவல் துறை மூலம் அவர்களை கீழே இறக்கிய பின்னர் மீண்டும் மின் விநியோகம் செய்யப்பட்டது”** என்று விளக்கம் அளித்துள்ளார்.

காவலர்கள் இல்லை, போலீஸ் பாதுகாப்பு முறையாகச் செய்து தரப்படவில்லை என்பது அடுத்ததாகச் சொல்லப்படுவது ஆகும். விஜய் பேச ஆரம்பித்த போது காவல்துறை சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடு செய்துள்ளதாகக் கூறி நன்றி தெரிவித்தார். காவல்துறை சரியான ஏற்பாடுகள் செய்யவில்லை என்றால் விஜய் அப்படி சொல்லி இருப்பாரா?

கரூரில் விஜய் வருகைக்கு 10 ஆயிரம் பேரை எதிர்பார்ப்பதாகச் சொல்லி அனுமதி பெறப்பட்டது. கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் கொடுத்த விண்ணப்பத்தில் 10 ஆயிரம் தொண்டர்கள்தான் வருவார்கள் என்று எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால் பிரச்சாரக்கூட்டத்திற்கு சுமார் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வந்தனர். திருச்சி, நாகப்பட்டினம், திருவாரூரில் ஏற்கனவே கூடிய கூட்டத்தை கருத்தில் கொண்டு SP1, ADSP2, DSP4 மற்றும் Inspectors 17 பேர் உள்பட சுமார் 500 காவலர்கள் இருந்தார்கள். பொதுவாக பொதுக்கூட்டத்துக்கு 50 பேருக்கு ஒரு காவலர் என்று நிறுத்தப்படு வார்கள். கரூர் நிகழ்ச்சிக்கு 20 பேருக்கு ஒருவர் என்ற கணக்கில் நிறுத்தப்பட்டார்கள்.

**விண்ணப்பத்தில் மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரை நேரம் கேட்டிருந்தனர். ஆனால் அந்தக் கட்சியின் அதிகாரப்பூர்வ தளத்தில் 12 மணிக்கு வருவார் என்று அறிவிக்கப்பட்டது. அதனால் காலை 11 மணி முதல் கூட்டம் கூடியது. ஆனால் இரவு 7.10 மணிக்குத்தான் விஜய் வந்தார். முப்பது நிமிடத்தில் கடக்க வேண்டிய தூரத்தை இரண்டு மணி நேரம் தாமதம் ஆகும் வகையில் மெதுவாகக் கடந்தார் விஜய். இது கூட்டத்தின் எதிர்பார்ப்பை அதிகரித்தது.**

பரப்புரை கூட்டம் நடைபெற்ற வேலுச்சாமிபுரம் என்ற இடம், கரூர் - ஈரோடு சாலையில் அமைந்துள்ளது. அவர்கள் கூட்டம் நடத்த முன்னதாக கேட்ட உழவர் சந்தை மற்றும் லைட்ஹவுஸ் ரவுண்டானா என்ற இரண்டு இடங்களும் இதைவிட குறுகலான இடங்கள் என்பதால் வேலுச்சாமிபுரத்தில் நிகழ்ச்சி நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. லைட் ஹவுஸ் பகுதியில் பெட்ரோல் பங்க் இருக்கிறது. அமராவதி பாலமும் இருக்கிறது. விஜய் கட்சி கேட்ட இடத்தை கொடுத்திருந்தால் இன்னும் நிலைமை மோசமாகி இருக்கும்.

**வரவேற்பு கொடுத்த இடத்தில் இருந்து அவரது ரசிகர்கள், தொடர்ந்து வாகனத்தை பின் தொடர்ந்து வந்ததால் கூட்டம் அதிகரித்துக் கொண்டே சென்றது. பேச வேண்டிய இடத்துக்குள் நுழைய முடியாத அளவுக்கு கூட்டம் இருப்பதால், பிரச்சார இடத்துக்கு முன்பே வாகனத்தை நிறுத்தி பேசும் படி போலீஸார் கூறியுள்ளனர். ஆனால், அந்த அறிவுறுத்தலை விஜய் தரப்பு ஏற்கவில்லை.**

நீண்ட நேர காத்திருப்பு, போதுமான தண்ணீர் தர மறுத்தது, இயற்கை உபாதைகளுக்கு கூட பொதுமக்களை வெளியில் செல்ல அனுமதிக்காமல் கயிறு வைத்து கட்டி இருந்தது ஆகியவைதான் மூச்சுத்திணறலுக்கு காரணம் ஆகும்.

**சொன்ன இடத்துக்கு சொன்ன நேரத்துக்கு வராதது யார் தவறு? அவரை சொன்ன நேரத்துக்கு வர வேண்டாம் என்று யாராவது தடுத்தார்களா? தடுத்து வைத்திருந்தார்களா? குறிப்பிட்ட இடத்தில் கூட்டம் அதிகமாக இருக்கிறது என்றால் முன்கூட்டியே பஸ் மீது ஏறி வந்திருந்தால் ஆங்காங்கே விஜயை பார்த்தவர்கள் கலைந்துச் சென்று இருப்பார்களே? அப்படி கலைந்து விடக் கூடாது என்பதுதானே அவரது திட்டம். திட்டம் போட்டு சாகடித்து விட்டார்கள்.**

திருச்சியில் இருந்து கரூர் வரை விஜய் வாகனத்தை தொடர்ந்து செல்லுமாறு சில மாவட்ட ரசிகர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அவர்கள்தான் தொடர்ந்து போக்குவரத்தை நிறுத்தி, குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நிகழ்ச்சி நடந்த இடம் கரூராக இருந்தாலும் இங்கு மற்ற மாவட்டங்களில் இருந்தும் ரசிகர்கள் அழைத்து வர வைக்கப்பட்டுள்ளார்கள். உயிரிழந்தோர் பட்டியலில் திண்டுக்கல், ஈரோடு, சேலம், திருப்பூர் ஆகிய மாவட்டங் களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அப்படியானால் திட்டமிட்டு பல்வேறு மாவட்டங்களில் இருந்து மக்கள் அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள் கூட்டத்தை அதிகரித்து காட்ட. வெளியூர்க்காரர்கள் எத்தனை மணிக்கு சாப்பிட்டார்களோ தெரியவில்லை?

**சொன்ன நேரத்துக்கு வரவிடாமல் தி.மு.க. தடுக்கவில்லை. இத்தகைய கோரச் சம்பவம் நடந்த பிறகு கரூரை விட்டு அவரை யாரும் விரட்டவில்லை. அவர் இருந்திருக்க வேண்டியதுதானே? ரசிகர்களுக்கு ஆறுதல் சொல்லாதது யார் குற்றம்?**

**இத்தகைய சூழல் அனைத்தையும் உருவாக்கிவிட்டு, அடுத்தவர் மீது பழிபோடுவது உயிர்பலியைப் போலவே கொடூரம் ஆனது ஆகும். பொய் முகத்தால் பிணவாடையை அமுக்க முடியாது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சென்னை, சி.ஐ.டி. நகர் பிரதான சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தியாகராய நகரில் தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் பிரதான சாலையை இணைக்கும் வகையில் 164.92 கோடி ரூபாய் செலவில் மேம்பாலம் கட்டப்பட்டு, மறைந்த தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் நினைவாக “ஜெ. அன்பழகன் மேம்பாலம்” என்று பெயர் சூட்டப்பட்டு திறந்து வைத்து, மேம்பாலத்தை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### சேலத்தில் மகளிருக்கு மின்சாரத்தில் இயங்கும் ஆட்டோ கடன் —

# மகளிர் சுய உதவிக்குழுக் கடன்கள் - நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்! அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலை!

சேலம், அக். 1–

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் மகளிருக்கு மின்சாரத்தில் இயங்கும் ஆட்டோ கடன் வழங்கும் விழா சேலம், அழகாபுரம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சமுதாயக் கூடத்தில் நேற்று (30.09.2025) நடைபெற்றது.



இவ்விழாவில் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பில் இருந்தபோது பொதுமக்களின் நலன் காக்கும் பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார்கள். குறிப்பாக 2006 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு சுமார் ரூ.7,000 கோடி கூட்டுறவு நகைக்கடன் தள்ளுபடி செய்தார்கள். அதேபோன்று வேளாண் பெருமக்களின் நலன் காக்கும் வகையில் இலவச மின்சார திட்டத்தை கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

மேலும், கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பில் இருக்கும் போதுதான் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகள் அச்சடிக்கும் பணிகளை தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கி எளிதில் குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டைகள் கிடைத்திட வழிவகை செய்தார்கள்.

தற்பொழுது முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நினைத்ததையெல்லாம் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் மகளிர் நலனுக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ் 19 வகையான 373 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம் மற்றும் 45 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது.

அனைத்து நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது.

சேலம் மாவட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் உயரிய வழிகாட்டுதல்களின்படி கூட்டுறவு நிறுவனங்களில் பயிர்க்கடன் பெற்ற 1,05,416 பயனாளிகளுக்கு ரூ.835.00 கோடி பயிர்க்கடன் தள்ளுபடியும், கூட்டுறவு நிறுவனங்களில் நகைக்கடன் பெற்ற 1,07,066 பயனாளிகளுக்கு ரூ.483.37 கோடி நகைக்கடன் தள்ளுபடியும், மகளிர் சுயஉதவிக் குழுக் கடன் பெற்ற 51903 மகளிர் பயன்பெற ரூ.132.30 கோடி மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

அதேபோன்று கடந்த நான்கரை ஆண்டுகளில் 4,33,294 விவசாயிகளுக்கு ரூ.3680.67 கோடி பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெற்று உரிய கெடு தேதிக்குள் திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியினை அரசே ஏற்று கூட்டுறவு நிறுவனங்களுக்கு செலுத்துகிறது.

மேலும், முதலமைச்சர் அவர்களால் 1,14,264 விவசாயிகளுக்கு கால்நடை பாரமரிப்பு கடன் ரூ.542.41 கோடி வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கான கடன் உச்ச வரம்பு ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தப்பட்டு, தற்போது மேலும் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 14,565 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.741.97 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த நான்கரை ஆண்டுகளில் 21,45,024 உறுப்பினர்களுக்கு ரூ.13,589.68 கோடி நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளை சுயசார்புடையவர்களாக மாற்றவும், நிதி சுதந்திரத்தை வளர்க்கவும், கடந்த நான்காண்டுகளில் 4,043 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.20.19 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. உரிய கெடு தேதிக்குள் திருப்பி செலுத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்படுகிறது. கூட்டுறவு வங்கிகள் மூலம் நடப்பாண்டு வரை 232 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.31 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. டாப்செட்கோ நீர்பாசன கடன் திட்டத்தின் கீழ் 159 ஆழ்துளை கிணறு அமைக்க கடன் வழங்கப்பட்டு, ரூ.79.50 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தாயுமானவர் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 70 வயதுக்கு மேற்பட்ட வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி என 92,998 குடும்ப அட்டைதாரர்களுக்கு இல்லம் தேடி ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இன்றையதினம் சேலம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் 15 மகளிருக்கு ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் மின் ஆட்டோவிற்கான கடன் தொகையும், 8 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிலான கடன், 2 ஆதரவற்ற விதவைகளுக்கு ரூ.1 இலட்சத்திற்கான கடன், 114 குழுக்கள் அடங்கிய 1,547 மகளிர்களுக்கு ரூ.10.17 கோடி மதிப்பீட்டிலான சுய உதவிக் குழுக்கடன்கள் என 1,572 பயனாளிகளுக்கு ரூ.10.66 கோடி மதிப்பிலான கடன் தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் சிறப்பான ஆட்சியை நடத்தி கொண்டு வருகிறார்கள். பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சமூக நலத்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மகளிர் நலனுக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் அரசின் அனைத்து திட்டங்களையும் அனைத்து தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முனைப்புடன் செயலாற்றி வருகிறார்கள். அந்தவகையில் முதலமைச்சர் அவர்களின் சிறப்பான திட்டங்கள் மற்றும் தொலைநோக்கு திட்டங்களை மற்ற மாநிலங்களிலும், பிறநாடுகளும் பின்பற்றும் வகையில் அமைந்துள்ளன.

முதலமைச்சர் அவர்களால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உதவித் தொகை, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமைப்பெண் மற்றும்தமிழ்புதல்வன்திட்டத்தினை செயல்படுத்தி உள்ளார்கள்.

அந்தவகையில் இன்றைய தினம் மகளிருக்கு மின் ஆட்டோ, மாற்றுத்திறனாளிகளுக்கு கடன், ஆதரவற்ற விதவைகளுக்கு கடன், மகளிர் சுய உதவிக்குழுக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவிகளை பெற்றுக்கொண்டு பயனாளிகள் அனைவரும் நமது முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., டி.எம்.செல்வகணபதி எம்.பி., மேயர் ஆ. இராமச்சந்திரன், எம்.எல்.ஏ.க்கள் இரா.அருள், எஸ்.சதாசிவம், துணை மேயர் திருமதி சாரதா தேவி, மேலாண்மை இயக்குநர் மா.குழந்தைவேலு, சதீஸ் குமார், திருமதி எஸ்.உமாராணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.